ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2098/23 - 2018 නොවැම්බර් මස 21 වැනි බදාදා - 2018.11.21
*2098/23 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (1அ) ஆம் பிரிவின் கீழ் மஹரகம நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்*

மஹரகம நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ், மஹரகம நகர சபையின் 13 ஆம் இலக்க றுக்மலே வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட போம்புவல தேவகே ஜொசப்பின் என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழு இல. 02 இன் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக 8 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவர், உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அந்த சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவருமான மஹரகம நகர சபையின் 13 ஆம் இலக்க றுக்மலே வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட் டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழு இல. 02 இன் குழுத் தலைவரால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஹீன்பெல்லகே தோன பியுமி பிரசாதினீ என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மஹரகம நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுது தேவகே சானிக அனுருத்த ரூபசிங்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(1அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஹீன்பெல்லகே தோன பியுமி பிரசாதினீ என்பவர் மஹரகம நகர சபையின் 13 ஆம் இலக்க றுக்மலே வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். டீ. எஸ். ஏ. ரூபசிங்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மஹரகம நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
*2018, நவெம்பர் 21.*

*12-84/1*

1A - G 28999— 27 (2018/11)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (1அ) ஆம் பிரிவின் கீழ் மஹரகம நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மஹரகம நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், மஹரகம நகர சபையின் 15 ஆம் இலக்க கொட்டாவ தெற்கு வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ஹன்சனீ ருவந்தி என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழு இல. 02 இன் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக 8 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவர், உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அந்த சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவருமான மஹரகம நகர சபையின் 15 ஆம் இலக்க கொட்டாவ தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழு இல. 02 இன் குழுத் தலைவரால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஹேவா பேடிகே ஆஷா கங்கா குமாரி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மஹரகம நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சுது தேவகே சானிக அனுருத்த ரூபசிங்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(1அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு ஹேவா பேடிகே ஆஷா கங்கா குமாரி என்பவர் மஹரகம நகர சபையின் 15 ஆம் இலக்க கொட்டாவ தெற்கு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எஸ். டீ. எஸ். ஏ. ரூபசிங்க,
தெரிவத்தாட்சி அலுவலர்,
மஹரகம நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
2018, நவெம்பர் 21.

12-84/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.